Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

THAMPI
links with
LIONAIR
கொழும்பா? யாழ்ப்பாணமா?
50 நிமிடங்களில் பயணம்...
பயணக்கட்டணம்
ரூபா 1,999/- மட்டுமே
கொழும்பில் 075-0355322
யாழ்.நகரில் 021-2222504
Hotline - 0777-382343, 072-401423

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 2 ஆம் நாள் (19.10.2002) சனிக்கிழமை இதழ் : 19

# 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' பெருவிழா

# இன்று யாழ்.நகரில் கோலாகல ஆரம்பம்!

## பன்னாட்டு பேராளர்களும் சங்கமம்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்தும் பன்னாட்டு அறிஞர்களும், பல சமூகத்தவரும் ஒன்றுகூடும் மாபெரும் தமிழ், கலை இலக்கிய விழாவான - "மானுடத்தின் தமிழ்க்கூடல்-2002" இன்று காலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிறது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பெருமெடுப்பில் நிகழவிருக்கும் இவ்விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 9.ஆவது தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் பின்னர் நடைபெறும் மிகப்பெரும் இலக்கிய ஒன்றுகூடல் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களும், அறிஞர்களும் ஒன்றுகூடும் இவ்விழா- "மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும், கலை இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்" என்னும் கருப்பொருளில் நான்கு நாட்களுக்கு பல அமர்வுகளாக நடைபெறவிருக்கின்றது.



நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் புதுவை, சேரலாதன்.

## எமது உள்ளத்து உணர்வுகளை முழு உலகுமே புரிந்துகொள்ளட்டும்

### மானுடத்தின் தமிழ்க்கூடல் குறித்து புதுவை

(யாழ்ப்பாணம்)

எங்களின் மானுட நேயத்தையும் எங்களின் மன உணர்வுகளையும், சிங்கள தேசம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு அப்பாற்பட்டு உலகம் - எம்மையும் எமது குரலையும் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு அறிந்து கொள்வதற்காகவே 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' என்ற நான்கு நாள் மாநாட்டை நடாத்தவிருக்கிறோம்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசும்போது -

(9ஆம் பக்கம் பார்க்க)

மாற்று அரசு அமைக்கும் முயற்சி

## 5 ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் ஒன்றை சந்திக்காது மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த ஐவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாற்று அரசு அமைய வேண்டுமா? இல்லையா? என்பதை உடனடியாக தீர்மானிக்க முடியாது, பொருத்தமான நேரத்தில்தான் இதுபற்றித் தீர்மானிக்க வேண்டும் என இச்

(9ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய மாநாட்டிற்காக பேராளர்கள் பலர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய "மானுடத்தின் தமிழ்க் கூடல்" நிகழ்வுக்காக உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பேராளர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

இன, மத வேறுபாடு எதுவுமின்றி புகழ்பூத்த தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் கலைஞர்கள் பலரும் இன்று ஆரம்பமாகும் மேற்படி நிகழ்வில் பேராளர்களாகப் பங்குபற்றவுள்ளனர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## மாநாட்டு உரைகளை தொகுத்து நூல் வடிவமாக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகும் மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வின் மிக முக்கிய உரைகள் அனைத்தும் ஒன்று திரட்டப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்படி நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். பல்துறைசார்ந்த, பன்னாட்டு பேராளர்களின் பல்வேறு ஆக்கங்கள் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன. இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு நூல் வடிவில் பகுதி பகுதியாக வெளியிடப்படவுள்ளன. வேற்று மொழியில் அமையும் ஆக்கங்களும் மொழிபெயர்க்கப்பட்டு தமிழில் வெளியிடப்படவுள்ளன.

## மருதின் கைவண்ணத்தில் உருவான இலச்சினை

'மானுடத்தின் தமிழ்க்கூடல்' இலச்சினை இந்திய ஓவியக் கலைஞர் மருதுவின் கைவண்ணத்தில் உருவானது. நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் புதுவை இரத்தினதுரை இத்தகவலைத் தெரிவித்தார்.

பல்பரிமாணக் கருத்தியல் நிலைகளைக் கொண்ட இவ் இலச்சினை பல்வேறு மட்டங்களிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழகத்தின் ஓவியர் ட்ராட்ஸ்கீ மருது ஒரு சில மணித்துளிகளில் இதனை உருவாக்கியிருந்தார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலை வழக்கு பொலிஸ் விசாரணை திருப்தியில்லை

### சர்வதேச ஊடகக் கண்காணிப்பு நிலையம் கண்டனம்

நிமலராஜன் கொலைவழக்கில் பொலிஸ் விசாரணையாளர்கள் நடந்து கொள்ளும் விதம்பற்றி சர்வதேச ஊடகக்கண்காணிப்பு அமைப்பான 'றிப்போட்டர்ஸ் சான்ஸ் புறண்ரியேர்ஸ்' தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

நிமலராஜன் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நபர்கள் இன்னமும் விசாரணைக்குட்படுத்தப்படாமலிருப்பது தொடர்பாகவே அவ்வமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் துப்பாக்கிதாரிகளால் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி நிமலராஜன் கொல்லப்பட்டார். இவ்விடயம் தொடர்பாக நிமலராஜனுக்கு நெருக்கமானவர்கள் பலரால - தமது தூதுக்குழுவுக்கு ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது என 'றிப்போட்டேர்ஸ் சான்ஸ் புறண்ரியேர்ஸ்' பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய க்டிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

### விண்ணாணம் விநாசியர்



கனகாலத்துக்குப் பிறகு வீரசிங்கம் ஹோலுக்குப் போறன் பாருங்கோ!

## நிமலின் 2ஆம் ஆண்டு நினைவு

### ஊடகவியலாளர்கள் அஞ்சலி

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் 2 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் பேரவைத் தலைவர் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கூட்டுறவு நுகர்ச்சிச சங்கங்களின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் யாழ். ஊடகவியலாளர் சங்கத்தலைவர் வே.தவச்செல்வம், யாழ்.மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன், நமது ஈழநாடு, உதயன், வலம்புரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் 'நமது ஈழநாடு' பத்திரிகை நிர்வாக இயக்குநருமான சிவமகாராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

பத்திரிகையாளர் நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கு மலர்வணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாணவர் பேரவைத் தலைவரும் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கியவருமான கஜேந்திரனின் தலைமையுரை இடம்பெற்றது. பின் உதயன்

(9ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் சிறுவர் அரங்கம், குறைதீர் மன்றம்

# திருகோணமலை அசம்பாவிதம்; சட்டநடவடிக்கை எடுக்க மறுப்பு!

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற மூன்று அப்பாவிப் பொதுமக்களின் கொலை தொடர்பாகப் பொலிஸார் எந்தச் சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொலைச் சம்பவங்களுடன் பொலிஸார் சிலர் சம்பந்தப்பட்டிருப்பதாக, காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோர் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர்களை தாம் அடையாளம் காட்டத் தயார் எனக் காயமடைந்தவர்கள் தெரிவிக்கின்ற போதும் - பொலிஸார் எந்த மேல் நடவடிக்கைகளையும் எடுக்கவிலலை.

சந்தே நபர்களைக் கைது செய்யவோ, காயமுற்றவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையிலோ பொலிஸார் இறங்காதிருப்பது திருகோணமலைப் பகுதி மக்கள் மத்தியில் பலத்த அதிருப்தியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேவேளை, இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார் செய்திருந்தும் கூட அவர்கள் தரப்பிலும் எந்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. வேறெந்த மனித உரிமைகள் அமைப்பும் திருமலைப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்துமாறு கோரி திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இரு முறை கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பியிருந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தனியார் வாகனங்களை நிறுத்த பொலீஸார் கட்டுப்பாடு விதிப்பு

(ஆவரங்கால்)

அச்சுவேலி பஸ் நிலையத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் மினி பஸ்கள் மற்றும் ஓட்டோ ஆகியன தரித்து நிற்க பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

நேற்றைய தினம் அங்கு வந்த அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இத்தடையை விதித்துள்ளார்.

பஸ் நிலையம் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களிற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் சமநேரத்தில் ஒரு மினிபஸ்ஸும், ஒரு ஓட்டோவும் மட்டுமே தரித்து நிற்க அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கட்டளையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் - அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (80)

## இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள

# தென்னந் தோட்டங்களைப் பார்வையிட விரும்புவோர் பதிவுசெய்ய வேண்டும்!

## தெங்குச் செய்கையாளர் சங்கம் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தென்னந் தோட்டங்களைப் பார்வையிட விரும்பும் அதன் உரிமையாளர்களின் விபரங்களைப் பதிவு செய்யுமாறு தெங்குச் செய்கையாளர் சங்கம் கேட்டுள்ளது.

கிளாலி, முகமாலை, எழுதுமட்டுவாழ், மிருசுவில், நாகர் கோவில் பகுதி ஆகிய இடங்களில் உள்ள தென்னந்தோட்டங்களின் சேத விபரங்களைப் பெற்று - பெருந்தோட்டத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாக இராணுவ மேலிடத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக தோட்ட உரிமையாளர்களை சம்பந்தப் பட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான திகதியை நிர்ணயிப்பதற்காக -

4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள, தெங்குச் செய்கையாளர் சங்கத் தலைவருடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை பதிவு செய்யுமாறு சங்கச் செயலாளர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

## மட்டுவில் பகுதியில்

# கத்தரிச் செடிகளில் கிருமித் தாக்கம்!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதியில் கத்தரிச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பலரும் கத்தரிச்செடிகள் ஒரு வகை கிருமிப் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக கவலை கொண்டுள்ளனர்.

இதனால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செய்கை பண்ணப்படும் கத்தரிக்காயை உரியவகையில், உரிய விலையில் அவர்களால் சந்தைகளில் விற்பனைசெய்ய முடியாதுள்ளது.

இதேவேளை, வழமையான மழை வீழ்ச்சி இல்லாததால் நெற் செய்கையாளர்களும் பெரிதும் வேதனை கொண்டவர்களாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றனர். (10)

# பலாலித் தளப் பகுதியிலிருந்து மண் ஏற்றிச் செல்லும் படையினர்

(புன்னாலைக் கட்டுவன்)

இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் - பலாலி முகாமைச் சூழவுள்ள பிரதேசங்களில் இருந்து, இராணுவத்தினரால் உழவு இயந்திரங்கள் மூலமாக மண் ஏற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஏற்றப்படும் மண் - பலாலி வீதியின் தெற்குப் பக்கமாகக் கொண்டு செல்லப்படுகின்றதென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (83)

# மாறுபட்ட விலைகளில் மருந்து வில்லைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதி பார்மஸிகள் சிலவற்றில் மருந்து வில்லைகள் மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உதாரணமாக வயிற்றுப் பொருமலுக்கு பாவிக்கப்படும் 'டைஜின்' என்ற வில்லை ஒன்று சில பார்மஸிகளில் 60 சதமாகவும் சில பார்மஸிகளில் 1 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த விலை ஏற்றத்தாழ்வைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (10)

# சமுர்த்தி வங்கி ஊழியர் போட்டிப் பரீட்சை

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள - சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றவுள்ளவர்களுக்கான - போட்டிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி வங்கிகளில் கடமையாற்றவுள்ள ஊழியர்கள் ஏற்கனவே சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களில் இருந்தே போட்டிப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

பிரதேச செயலர் பிரிவுகளில் உருவாக்கப்படும் - ஐந்து பேர் கொண்ட சிறுகுழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வங்கிகளின் எண்ணிக்கையும் அமையும். (59)

# 2 ஆம் ஆண்டு நினைவு நாள்

## ஊடகவியலாளர்

# மயில்வாகனம் நிமலராஜன்



குருஷேத்திர
மையத்திலிருந்து
தன்னின
மக்களின்
உரிமைக்காக
தனது பேனாவை
ஆயுதமாக்கி
குரல் தந்தவன்

இவன்
மரணிக்கவில்லை
நீங்காத
நினைவாக
நீக்கமற
நிறைந்துள்ளான்!

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 19 |
| 06 | 10 |
| 1961 | 2000 |

(சி-069)

- நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு

# மீளக் குடியேறிய மக்களுக்காக
# 50 மில்லியன் ரூபா கோரப்பட்டது!
## கிடைத்ததும் குடும்பத்திற்கு ரூ.15ஆயிரம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக மேலும் ஐம்பது மில்லியன் ரூபா அரசிடம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அடுத்தவார முற்பகுதியில் கொழும்பில் திறைசேரி அலுவலகத்தில் நடைபெறவுள்ள மிக முக்கியமான கூட்டம் ஒன்றில் இவ்விடயம் குறித்து ஆராயப்படவுள்ளது. தற்போதைய நிலையில் யாழ். மாவட்டத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

யாழ். செயலகத்தின் பருமட்டான மதிப்பீடுகளின்படி அண்மையில் மீளக் குடியமர்ந்து கொண்ட குடும்பங்களுக்கான பதினையாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு மட்டும் சுமார் 450 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது. ஆனால் முப்பது மில்லியன் ரூபா மட்டுமே யாழ். செயலகத்திடம் தற்போது உள்ளது. இதனால் அனைத்து மக்களிற்கும் மேற்படி கொடுப்பனவைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயத்தைக் கருத்தில் எடுத்து மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வது குறிதது ஆராயப்படவுள்ளது. குறைந்தபட்சம் உடனடியாக ஐம்பது மில்லியன் ரூபா ஒதுக்கீடு கிடைக்கலாம் என அங்கிருந்து எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 150ஆம் ஆண்டு நிறைவு முத்திரை வெளியீடு




(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் 150ஆம் வருட சேவையை முன்னிட்டு ரூபா 4.50 பெறுமதியான முத்திரை இன்று 19ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி முன்றிலில் தபால் திணைக்களத்தால் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் இந்நிகழ்வைக் குறிக்கும் பொருட்டு ஒரு மலரும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் சி.சிவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் ஆ.நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும் இம்முத்திரை வெளியீடு - பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை, மற்றும் கனடாக் கிளை ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிய சந்தேக நபர்கள் விளக்க மறியலில்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையிலுள்ள ரொட்டிக் கடையொன்றில் உரிய முறையில் சுகாதாரம் பேணப்படவில்லை என கடை உரிமையாளருக்கு, பொது சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகவே பரிசோதகர் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கடையின் உரிமையாளரும், அவரது நண்பரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது - எதிர்வரும் 29ஆம் திகதி வரை இவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி உத்தரவிட்டார்.

(23)

# அரியாலை இராணுவ முகாமினுள் இயங்காத பாடசாலை, ஆலயம்!

(நமது நிருபர்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், சிறி பார்வதி வித்தியாலயம், சித்திவிநாயகர் ஆலயம் - ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தான நிலையில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளமையால்- இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் எல்லைகுட்பட்ட, மேற்படி இடங்களில் 2000ஆம் ஆண்டளவில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இராணுவ முகாம், இன்னமும் அகற்றப்படாமையினால் - அப்பகுதியில் உள்ள தமது வீடுகளில் மீளக் குடியமர முடியாத நிலையில் சுமார் அறுபது குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

# புலிகளின் அரசியல்துறை செயலகத்துக்கு உடன் தொலைபேசி இணைப்பு வழங்குக!
## அமைச்சர் மிலிந்த மொறகொட உத்தரவு

(நமது நிருபர்)

கிளிநொச்சியிலுள்ள - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்துக்கு உடனடியாக தொலைபேசி இணைப்புக்களை வழங்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது.

பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ரெலிகொம் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இரண்டாம் கட்டச் சமாதான பேச்சுக்களுக்கான ஆயத்த நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டுள்ள நிலையில் வெளியிடங்களுடனான தொலைபேசித் தொடர்பை பேணிக் கொள்வது அவசியம் என்பதாலேயே அரசாங்கம் இந் நடவடிக்கையை எடுத்திருக்கிறது.



# புத்தர் சிலை அகற்றப்பட்ட விவகாரம்
## கண்காணிப்புக் குழு விசாரணை

கடற்படையினர் முகாமிட்டிருந்த சரவணைச்சந்தியில் இருந்த புத்தர் சிலை இனந்தெரியாதோரால் உடைத்து அகற்றப்பட்டுள்ளது.

கடற்படையினர் முகாம் அமைந்திருந்த பகுதியில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. படையினர் அங்கிருந்து வெளியேறிய பின்னர் புத்தர் சிலையும், படையினர் தங்கியிருந்த கட்டடமும் இனந்தெரியாதோரால் சேதமாகப்பட்டிருந்தன.

இந்நிலையில் புத்தர் சிலை முற்றாக அகற்றப்பட்டு அங்கே வைரவர் சூலம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

கடற்படையினர் - இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டை அடுத்து நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கண்காணிப்புக் குழுவினர் அங்கு சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை - 1990இற்கு முன்னர் இந்த இடத்தில் வைரவர் கோவில் ஒன்று இருந்ததாகவும், அது அகற்றப்பட்டே புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்ததாகவும் அப்பகுதி மக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

(112)

# அநாதரவாகக் கிடந்த சிசுவைத் தத்தெடுக்கப் பலர் விண்ணப்பம்

(வடமராட்சி)

தும்பளை லூர்த்துமாதா கோவிலடிப் பகுதியில் அநாதரவான நிலையிலிருந்து மீட்கப்பட்ட பெண் சிசுவை தத்தெடுக்க - மட்டக்களப்பு, கண்டி ஆகிய பகுதிகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி இடத்தில் பற்றைக்குள் ஓலையால் மூடப்பட்ட நிலையில் - கதறி அழுதுகொண்டிருந்த சிசுவைக கண்ட - பெண்ணொருவர் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் கொடுத்திருந்தார்.

தகவல் கிடைத்ததை அடுத்து அங்கு வந்த பொலிசார் சிசுவை மீட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பணிப்பின்பேரில் - மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்து அங்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையிலுள்ள சிசுவைத் தத்தெடுக்க விரும்வோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் - மட்டக்களப்பு, கண்டி, மற்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 26இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(23)

# சமூக வள அபிவிருத்தித் திட்டங்களுக்கு 7 லட்சத்து 45 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து 7 லட்சத்து ஆயிரத்து 850 ரூபா செலவில் சமூக வள அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய நூலகத்திற்கு 25 ஆயிரம் ரூபா செலவில் புத்தகம் கொள்வனவுக்கும்,

மாதனை சனசமூக நிலையத்திற்கு புத்தக கொள்வனவுக்காக 25 ஆயிரம் ரூபாவும்,

பருத்தித்துறை ஜீவசோதி சனசமூக நிலைய நூல் நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும்,

கெருடாவில் விவேகானந்த சனசமூக நிலையத்திற்கு புத்தக கொளவனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அல்வாய் நக்கீரன் சனசமூக நிலையம் புத்தக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

சதாவதானி சனசமூக நிலையத்திற்கு புத்தக கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்வதற்காக 25 ஆயிரம் ரூபாவும்,

பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய முன்பள்ளி தளபாடக் கொளவனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

புலோலி மேற்கு திரவியநாதன் முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புலோலி கிழக்கு முதலியம்பாள் முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

ஞானசம்பந்தர் கலாமன்ற முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

மாதனை மாதர் முன்னேற்றச் சங்க நிர்மாணப் பணிக்காக 76 ஆயிரத்து அறுநூறு ரூபாவும்,

சென்.அன்ரனி சனசமூக நிலைய முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,

கெருடாவில் கலைச்செல்வி சனசமூக நிலைய முன்பள்ளி தளபாடக கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும,

பருத்தித்துறை பாமதி கருணை இல்லம் புனரமைப்புக்கு 12 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும்,

திக்கம் மத்திய சனசமூக நிலைய மலசலகூடம் அமைப்பதற்கு 40 ஆயிரம் ரூபாவும்,

கிராம அபிவிருத்திச் சங்க மாதனை படிப்பக தளபாடக் கொள்வனவுக்கு 25ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திக்கம் நூலக பாலர் பாடசாலை கட்டட வேலைக்கு 97ஆயிரம் ரூபாவும்,

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் நூல் நிலையத்திற்கு புத்தக கொள்வனவுக்கு 24 ஆயிரத்து 250 ரூபாவும்,

பொலிகண்டி பாரதி விளை யாட்டுக் கழக மைதான வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும்,

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டட அமைப்புக்கு 1 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்வெட்டித்துறை வைத்தியசாலைக் காவலாளி கொலை வழக்கில் மேலும் இருவர் கைது

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக் காவலாளி வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக - மேலும் இரு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரையும் இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

இவ்வருடம் பங்குனி மாதம் 25ஆம் திகதியன்று இரவுக் கடமையை முடித்துவிட்டு வீடு திரும்பிய வேளையில் உடுப்பிட்டிப் பகுதியில் வைத்து மாணிக்கம் நவராசா என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு - ஆரம்ப கட்ட விசாரணைகள் நடைபெற்று வரும் இவ்வேளையில்- மேலும் இரு சந்தேகநபர்களைப் பொலிசார் கைது செய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இருவரையும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(23)

# பல நாள் திருடன் கடைக்காரரிடம் சிக்கினார்

(ஏழாலை)

இளவாலைப் பகுதியிலுள்ள கடையொன்றில் நீண்ட நாட்களாக பொருட்களைத் திருடி வந்த நபர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

இளவாலை சுரேன் வாணிபத்தில் நீண்ட நாட்களாக பொருட்களை திருடி வந்த தென்மராட்சியைச் சேர்ந்த நபர் - கடந்த புதன்கிழமையும் கடையில் ஓடு பிரித்து - திருட்டில் ஈடுபட்டிருந்தவேளை கடையின் உரிமையாளரால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

(93)

# பழமரக்கன்றுகள் விநியோகம்

(வடமராட்சி)

பழ மானியத்திட்டத்தின் கீழ் பருததித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 13 பேருக்கு பழமரக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

எலுமிச்சை, தோடை, மாதுளை, பலா ஆகிய மரக்கன்றுகளை வழங்க மாகாண விவசாயத் திணைக்களம் அனுமதியளித்துள்ளது.


(23)

# புங்குடுதீவுக்கு 15 வருடங்களாக மின்சாரம் இல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, ஆலடிப் பிரதேசத்திற்கு கடந்த 15 வருடங்களாக மின்சாரம் வழங்கப்படவில்லை.

பல தீவுகளுக்கு மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்ற போதிலும் இத்தீவிற்கு மட்டும் மின்சாரம் வழங்க யாரும் முன்வரவில்லையென - அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(112)



# கண்ணீர் மல்கியபடி உரைநிகழ்த்தினார்
# ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹூசைன்!
## அமெரிக்கா தோற்கடிக்கப்படும் என்று சூளுரைத்தார்!

(பாக்தாத்)

'ஈராக் மிகப்பெரும் வரலாற்று நெருக்கடியைச் சந்தித்து நிற்கும் வேளையில், நாட்டை வழிநடத்தும் மிகப்பெரும் பொறுப்பில் நான் இருக்கிறேன' என்று தெரிவித்தார் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன்.

நடைபெற்று முடிந்த பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் சதாம் மேலும் ஏழு ஆண்டுகள் ஆட்சியில் நீடிக்கலாம் என மக்கள் ஆணை வழங்கியிருந்தனர்.

அதனையடுத்து மேலும் ஏழு ஆண்டுகள் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொள்ளுவதற்குரிய சத்தியப் பிரமாணத்தை சதாம் செய்துகொண்டார்.

சத்தியப்பிரமாண வைபவத்தையடுத்து சதாம்ஹூசைன் தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அமெரிக்காவின் ஈராக்குக்கு எதிரான போர் ஏற்பாடுகளை முதன்மைப்படுத்தி அமைத்திருந்த அந்த உரை மிகவும் உணர்வுபூர்வமானதாக அமைந்திருந்தது.

உரையாற்றிக் கொண்டிருந்த போது உணர்ச்சி மேலீட்டினால் அடிக்கடி ஈராக் ஜனாதிபதியினது கண்கள் கலங்கின, கண்ணீர்த்துளிகளும் முகத்தில் காணப்பட்டன.

மிக இக்கட்டான காலத்திலும் தன் பின்னால் அணிதிரண்டிருக்கும் மக்களை நன்றியுடன் வாழ்த்தினார் சதாம். மக்கள் தன்னிடம் ஒப்படைத்திருக்கும் நாட்டின் பொறுப்பை தனது முழுச்சக்தியையும் பயன்படுத்தி மிகத்திறமையாக ஆற்றப்போவதாகவும் ஈராக்கிய ஜனாதிபதி உறுதியளித்தார்.

தமது எதிரி நாடான அமெரிக்கா தோற்கடிக்கப்படும் என்றும் அவர் சூளுரைத்தார்.

# ஈராக் தொடர்பான அமெரிக்க வரைபு ஐ.நா. மேசைக்கு வருகிறது!
## பிரான்ஸ் எதிர்ப்பு

(நியூயோர்க்)

ஈராக்குக்கு எதிரான படை நடவடிக்கைக்கு அங்கீகாரம் கோரும் தனது தீர்மான வரைபை ஐ.நா பாதுகாப்புச்சபைக்குக் கொண்டு வருகிறது அமெரிக்கா.

கடந்த சில நாட்களாக இடம் பெற்ற எதிரும் புதிருமான விவாதங்களை அடுத்து, அமெரிக்கா, தீர்மான வரைபை ஐ.நா மேசைக்கு கொண்டு வருகிறது.

புதிய கடுமையான விதிமுறைகளுடன் மிகக்குறுகிய அவகாசத்துடன் அயுதப்பரிசோதனைகளை மேற்கொண்டு, ஆயுதப்பரிகரணம் செய்ய, ஈராக் அனுமதிக்க வேண்டும். இல்லையெனில் அதன் மீது பலப்பரயோகம் மேற்கொள்ள வேண்டும் என்று கோரும் இத்தீர்மானத்தைப் பிரான்ஸ் வெளிப்படையாக எதிர்க்கிறது.

அமெரிக்காவின் தீர்மான வரைபை புறம் தள்ளிவிட்டு பிரான்ஸ் வேறு இரு தீர்மானத்துள் இரண்டு விடயங்கள் அமைவதை தவிர்க்கும்படி கேட்கிறது. முதலில் ஆயுதப்பரிசோதனை பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன் பின்னர் உள்ள சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அடுத்த தீர்மானத்தை பின் னர் மேற்கொள்ளலாம் என்றும் பிரா ன்ஸ் கூறுகிறது. ஐ.நா ஏற்கிறதோ இல்லையோ அமெரிக்கா ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் எ[illegible] கொலின் பவல் தெரிவித்தார்.

## போருக்கு அவசரப்படும் அமெரிக்காவின் அதி முக்கிய கனவான்கள்!



( இடமிருந்துவலமாக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல், அமெரிக்க உப ஜனாதிபதி டிக் செனி, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஸ், அமெரிக்க தேசிய பாதுப்பு ஆலோசகர் கொண்டோலிசா றைஸ் )

இச்சந்திப்பு செப்ரம்பர் 19ஆம் திகதி ஓவல் அலவலகத்தில் ( Oval Office) இடம் பெற்றது.

உலக நாடுகளின் நியாயக்குரலை நிராகரிக்கின்றது அமெரிக்கா. உலக சமாதானத்திற்கான போர் இது என்று சொல்லும் அமெரிக்கா, சில வேளைகளில் உலக சமாதானத்திற்கு நிரந்தர அபாயத்தை உருவாக்குகிறதா? என்று கேட்கின்றனர் ஆய்வாளர்கள்.

# சீ.ஐ.ஏ. எச்சரிக்கை!

(வோஷிங்ரன்)

சர்வதேசப் பயங்கரவாதிகள் அமெரிக்காவுக்கும் அமெரிக்க நலன்களுக்கும் எதிராக 'பல்முனைப்பட்ட நடவடிக்கைச் செயற்பாட்டை' (Multiple theatre of Operation) ஆரம்பிக்கக்கூடிய நிலையில் உள்ளனர் என சி.ஐ.ஏ இன் பணிப்பாளர் ஜோர்ஜ் ஸ்ரெனற் பகிரங்க எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

தற்பொழுது பயங்கரவாதச் சக்திகள் அனைத்தும் மீள ஒன்று சேர்ந்துள்ளதாகவும் அவர்களது அபாயம் தீவிரமாக எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் சர்வதேச பயங்கரவாத வலைப்பின்னல் மேற்கொண்டிருந்த திட்டமிடலைப்போல பல மடங்கு வலுவான திட்டமிடலுடன் இனிவரும் தாக்குதல்களை பங்கரவாதிகள் மேற்கொள்ளலாம் என்றும் ஸ்ரெனற் எச்சரித்தார்.

# வேலி பயிரை மேய்ந்தது குவாட்டமாலாவின் சீர்கேடு

இலத்தீன் அமெரிக்க நாடான குவாட்டமாலா தனது நாட்டினுடைய போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைப் பிரிவைக் கலைத்துள்ளது.

வேலியே பயிரை மேய்வது போல நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் போதைப் பொருள் கடத்தல், திட்டமிட்ட குற்றச்செயல்கள் ஆகியவற்றில் தாராளமாக ஈடுபட்டு வந்தனர். அவர்கள் ஊழல், லஞ்சச் செயற்பாடுகளிலும் சட்டத்திற்கு எதிராகவும் செயற்பட்டனர்.

இக்காரணங்களால் அப்பிரிவு கலைக்கப்பட்டதுடன், அரசாங்கம் அவர்களுக்கு எதிரான சட்டரீதியான விசாரணைகளிலும் இறங்கியுள்ளது.

# அங்கோலாவில் பாரிய நிதி மோசடி?

அங்கோலாவில் திறைசேரியிலிருந்த ஒரு பில்லியன் டொலர்கள் காணாமற் போயுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ இதற்கு யார் பொறுப்பாளிகள் என்பது பற்றியோ அங்கோலா அரசு எவ்வித விளக்கங்களையும் இன்னும் வெளியிடவில்லை.

# நீதி நிலைநாட்டப்படும் அவுஸ். பிரதமர் உரை!

தனது நாட்டுமக்களைக் கொன்று குவித்தவர்களைக் கண்டுபிடித்து, நீதி நிலைநாட்டப்படும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் தெரிவித்துள்ளார்.

அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக பாலித்தீவுக்கு வந்திருந்த அவர், இந்தோனேசியா மற்றும் ஏனைய நட்பு நாடுகளுடன் இணைந்து அவுஸ்த்திரேலியாவும் பயங்கரவாதத்தை ஒழித்து நீதியை நிலைநாட்டுவதில் உதவுமென்றார்

# ஜம்மு - காஷ்மீரில் மத்திய ஆட்சி!

ஜம்மு கஷ்மீரில் தேர்தலில் வெற்றிபெற்ற மூன்று கட்சிகளும் ஆட்சியை அமைப்பதில் இழுபறிப்படுவதனால் இந்திய மத்திய அரசின் ஆட்சி அங்கு அமுலாகிறது.

தற்போதய முதலமைச்சர் பரூக் அப்துல்லாவை இடைக்கால முதலமைச்சராக இருக்கும்படி இந்தியப் பிரதமர் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

அதனையடுத்து மத்திய ஆட்சி அங்கு அமுலாகிறது.

சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் கருத்தொருமைப்பாட்டுடன் ஆட்சி அமைக்க சம்மதித்தால் மத்திய அரசின் ஆட்சி நீக்கப்பட்டு மாநில சட்டசபை அமைக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் புதுடெல்லி அறிவித்துள்ளது.

## ஐவரிக்கோஸ்டில் சமாதானம்

(ஐவரிக்கோஸ்ட்)

ஐவரிக்கோஸ்ட்டில் கடந்த ஒரு மாதகாலமாக அரசாங்க விசுவாசப் படைகளுடன் சண்டையில் ஈடுபட்ட கிளர்ச்சிப்படைகள் ஒரு சமாதானத் தீர்வுக்கு முன்வந்துள்ளன.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் முயற்சியையடுத்து ஐவரிக்கோஸ்ட்டில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகிறது.

உலகின் கொக்கோ ஏற்றமதி நாடுகளில் ஐவரிகோஸ்ட் முக்கியத்துவம் வாய்ந்தது.

# இந்தியப் படைகளைப் போல பாக். படைகள் களைக்கவில்லை
## பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர்

(இஸ்லாமாபாத்)

இந்தியப்படைகள் போல பாகிஸ்தான் படைகள் களைப்போ துன்பமோ அடையவில்லை என்று பாகிஸ்தானின் இராணுவப் பேச்சாளர் ஜெனரல் ரஷிகிரஷி தெரிவித்தார்.

பாகிஸ்தான் படைகள் உற்சாகமாகவே உள்ளன எனத் தெரிவித்த அவர், இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியிலிருந்து இந்தியப் படைகள் விலகிச்செல்வது அவை அனுபவித்த இராணுவரீதியான துன்பங்களுக்கு ஒரு நிவாரணியாக அமைகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தியா, படைகளை விலக்கத் தீர்மானித்திருப்பது எல்லையில் உருவாகியிருந்த இராணுவப் பதட்டத்தை குறைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.


அதற்குப் பதிலாக பாகிஸ்தானும் படைவிலகலுக்கு தயாராக இருக்கிறது என்று கூறிய இராணுவப் பேச்சாளர் அதற்கான திகதி விரைவில் குறிக்கப்படும் என்றார்.

இந்தியா ஒருபடி நல்லெண்ணத்தைக் காட்டினால் பாகிஸ்தான் இரண்டுபடி நல்லெண்ணத்தைக் காட்டும் என தாம் ஏற்கனவே சொல்லியுள்ளதையும் அவர் ஞாபகமூட்டினார்.



அன்றைய கிழக்குப் பாக்கிஸ்தானின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஏ.ஏ.கே.நிலாசி (வலது), இந்திய இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் ஜே.எஸ். அரோரா (இடது) ஆகியோர் கிழக்குப் பாக்கிஸ்தானின் படைகள் இந்தியாவிடம் நிபந்தனையில்லாமல் சரணடையும் பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர்.

# வார்த்தை விளையாட்டு - 03




முழுப் பெயர் : ..............................................

கற்கும் பாடசாலை : ..............................................

கற்கும் தரம் : ..............................................

முகவரி : ..............................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. புன்னகை என்று சொல்லலாம்.
5. திரைகடலோடியும் இதைத் தேடு என்பது முதுமொழி.
6. மூழ்கிய கப்பல்.
7. ஒடுங்கிய வாயுடைய ஒரு பாத்திரம். *(விஞ்ஞான ஆய்வு கூடங்களில் பார்க்கலாம்)*
8. ஆழி.

### மேலிருந்து கீழ்

1. மாதங்களில் ஒன்று.
2. குதிரைக்கு ஒத்த கருத்துடைய சொல்.
3. வர்ணம்.
4. அரங்கத்தை மறைப்பது.
5. ஏச்சு என்பதை இப்படியும் சொல்வர்.
8. பழம் *(இரண்டெழுத்துச் சொல் தலைகீழாக இருக்கிறது)*

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 24-10-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 1

சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசுபெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**தர்மலிங்கம் தினேஷ்**
மதவடி ஒழுங்கை,
சுதுமலை,
மானிப்பாய்.

*2ஆம் பரிசு -*
**மதுசிந்துஜா சரவணமுத்து**
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

*3ஆம் பரிசு -*
**மாணிக்கம் துஜீபன்**
320/2 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி

## வார்த்தை விளையாட்டு - 2


சரியான விடை எழுதி குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**தீபிகா விஜயேந்திரசர்மா**
121/பி, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

*2 ஆம் பரிசு -*
**சாமந்தி வைகுந்தநாதன்**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

*3 ஆம் பரிசு -*
**சந்திரன் வர்ணகுமார்**
மின்சாரநிலைய அருகாமை ஒழுங்கை,
ஓடக்கரை,
பருத்தித்துறை.

☆ *பரிசுகள் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.*



# சிறுவர் அரங்கம்

## குரங்கும் மணியும்



அவை அழகான கோழிக்குஞ்சுகள். தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. தாய் கொக்.... கொக்.... என்று சத்தமிட்டது. குஞ்சுகள் வில்.... வில் ... என்று சின்னஞ்சிறிய இறகுகளை அடித்து விரைவாக ஓடின.

ஒரு நாள் அந்தக் கோழிக்கு குஞ்சுகள் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. தூரத்துப் பற்றைக்குள் இருந்த நரி அவற்றைப் பார்த்தது. அவற்றைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது. கலைத்தது.

மரத்தின் மேலிருந்த குரங்கு நண்பர் அதனைப் பார்த்தார். பாய்ந்து வந்தார். ஒரு தடியால் நரியை விரட்டினார். நரியைக் கலைத்து விட்டார். நரி ஓடி விட்டது. குஞ்சுக் கோழிகளின் தாயார் குரங்குக்கு நன்றி சொன்னார். அந்தப் பற்றைக்குள் நரி, ஓநாய் போன்ற கொடிய விலங்குகள் வசித்து வந்தன. குஞ்சுகளை இவற்றிடமிருந்து எப்படித் தப்பவைப்பது? என்று தாயார் கேட்டார்.

குரங்கு ஓர் உபாயம் சொன்னது. மரக்கிளையில் நான் ஒரு மணியைக் கட்டிவிடுகிறேன். பற்றைக்குள் இருந்து நரியோ ஓநாயோ வந்தால் நான் மணியை அடிப்பேன். நீங்கள் ஓடித் தப்பி விடலாம் என்றது.

குரங்கு மணியைக் கட்டியது. பற்றைக்குள் இருந்து நரி வெளியே எட்டிப் பார்த்தது. குரங்கு மணியை அடித்தது. குஞ்சுகள் தப்பி ஓடிவிட்டன.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**

## உரிமை யாருக்கு? அங்கம் - 3 தமிழில்: தி.த. நன்றி - ரிங்கிள்.



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



**கார்த்தீபன் சிவராஜா**
யா/மத்திய கல்லூரி,
தரம் - 7

ஆர்வமுள்ள துறைகள்

*கிரிக்கெட், தொலைக்காட்சி பார்த்தல், நண்பர்களுடன் நட்பு.*



**அபிநயா கண்ணதாஸ்**
யா/புனித ஜோண் பொஸ்கோ,
தரம் - 2

ஆர்வமுள்ள துறைகள்

*சங்கீதம்,*
*நடனம்*



**மயூரகிரி தியாகராஜசர்மா**
யா/அத்தியார் இந்துக்கல்லூரி
தரம் - 8

ஆர்வமுள்ள துறைகள்

*வாசித்தல்,*
*முத்திரை சேகரித்தல்*



**சர்மிலா பாலச்சந்திரன்**
யா/மகாஜனாக் கல்லூரி
தரம் - 6

ஆர்வமுள்ள துறைகள்

*பத்திரிகை வாசித்தல்,*
*வானொலி கேட்டல்*



**செல்வத்திரவியம் திருக்குமரன்**
யா/யூனியன் கல்லூரி
தரம் - 10

ஆர்வமுள்ள துறைகள்

*கிரிக்கெட், சித்திரம்*

## மென்பொருள்- Software

மென்பொருள் என்பது கணினிக்குக் கொடுக்கப்படும் கட்டளைகளின் ஒரு தொகுப்பாகும்.




இது இரண்டு வகைப்படும்.

1. கணினியை இயக்குவதற்குப் பயன்படும் மென்பொருள் (**Operating System**) உதாரணமாக **Windows 98, Windows 2000, etc.**

2. கணினியின் உதவியோடு பிரயோகங்களுக்கு பயன்படும் மென்பொருள் (**Application Software**)

உதாரணம் - **MS Office, Adope Page Maker, Corel draw.**

வன்பொருள் என்பது தொட்டும், பார்த்தும் உணரக்கூடிய கணினியின் அனைத்து பாகங்களையும் குறிக்கும். உதாரணம் மொனிற்றர், மௌஸ், கீபோர்ட், **CPU** அல்லது சிஸ்ரம் யுனிற், பிறிண்டர் ஆகியவை. **CPU** உடனிணைக்கப்படும் வெளிப்புற சாதனங்களை (**PERIPHERALS**) இரு வகைப்படுத்தலாம். அவையாவன

1) உள்ளீட்டுச் சாதனங்கள் - (**Input devices**)

2)வெளியீட்டுச் சாதனங்கள் - (**Output devices**) உள்ளீட்டுச் சாதனங்கள் கணனிக்கு தரவுகளையும், கட்டளைகளையும் வழங்குவதற்கு உபயோகிக்கப்படும் சாதனங்களாகும். உ-ம்: கீபோட், மௌஸ், ஸ்கானர், மைக்கிரோபோன்.

வெளியீட்டுச் சாதனங்கள் என்பது கணினியில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள உபயோகப்படும் சாதனங்களாகும்.

உ-ம் மொனிற்றர்,பிறிண்டர், ஸ்பீக்கர்

### கணினியின் பாகங்கள்.


**மொனிற்றர்** (Monitor)

கணினியின் நினைவகத்தில் இருப்பவற்றைப் பார்ப்பதற்கு உதவும் **TV** போன்ற சாதனம் **Monitor** என அழைக்கப்படும்.


**Monitor** களில் பல வகை உண்டு. அளவாலும், தரத்தாலும், உருவத்தாலும், தொழிநுட்பத்தாலும் இவை வேறுபடுகின்றன. இவற்றின் வேறுபாட்டுக்கேற்ப விலைகளும் வேறுபடும்.

மொனிற்றரின் அளவு அதன் திரையின் அளவால் தீர்மானிக்கப் படுகின்றன. பொதுவாக 14', 15', 17', 20' மொனிற்றர்கள் உண்டு.

**Monitor** களின் தரம் தனிவர்ண (**Monochrome**) வர்ண (**colour**) வகைகளாலும் மற்றும் குறைந்த கதிர்வீச்சு (**low Rediation**), உயர் ரெசலூசன் (**High Resolution**) **Non** இன்ரர்லேஸ் (**Non Interlace**) தன்மைகளாலும் வேறுபடுகின்றன. (**Non Interlace** என்பது மொனிற்றரின் திரையில் படத்தை எழுதும் ஒரு முறையாகும். இதற்கு **Interlace, Non Interlace** என்னும் இரு முறைகள்



பயன்படுத்தப்படுகின்றன. **Non Interlace** முறை மிகச்சிறந்த முறையாகும். **Monitor** இன் திரையிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு கண்பார்வையைப் பாதிக்கும் ஆதலால், இக்கதிர் வீச்சைக் குறைக்கக்கூடிய தொழில்நுட்பத்துடன் உற்பத்தி செய்யப்படும் போது இவை **Low Radiation Monitor** என அழைக்கப்படும். ஒரு




மொனிற்றரில் வெளியிடப்படும் படங்களின் துல்லியத் தன்மையையும், தெளிவையும் தீர்மானிப்பது அதன் ரெசெலூசன் (**Resolution**) ஆகும். மொனிட்டரின் திரையில் தோன்றும் ஒரு படத்தின் துல்லியம் அப்படம் எத்தனை புள்ளிகளைக் கொண்டு வரையப்பட்டுள்ளது என்பதை வைத்தே அளவிடலாம். அப்புள்ளிகளின் இரு பரிமாண எண்ணிக்கையே அப்படத்தின் துல்லியத்தின் அலகாகும். உதாரணமாக மொனிட்டர்களின் புள்ளிகளின் எண்ணிக்கை 640x480, 800x600, 1024x768, 1280x1024, 1600x1200 என்று குறிப்பிடப்படும். ஒரு படத்தை அதிக புள்ளிகளைக் கொண்டு துல்லியமாகவும் தெளிவாகவும் காட்டக்கூடிய மொனிட்டர்களையே ஹை றெசெலூசன் (**High Resolution**) மொனிட்டர்கள் என அழைப்பர். உ-ம் 1280x10242ம் 1600x1200 புள்ளி அளவுகளைக் கொண்டவை.

அளவாலும், தரத்தாலும் மட்டுமின்றி மொனிட்டர்கள் தொழில்நுட்பத்தாலும் வேறுபடும். **Analog Monitor, Digital Monitor, CRT Monitor, Liquid Crysttal Monitor** என இவை வேறுபடுகின்றன.

**- சேரலாதன்**

## கழுகும் காகமும்



உயரமான மலைமுகட்டின் மீது கழுகு ஒன்று கூடுகட்டி வாழ்ந்து வந்தது. மலையின் அடிவாரத்தில் ஒருமரம் இருந்தது. அதில் ஒரு காகம் கூடு கட்டி வாழ்ந்து வந்தது.

கழுகு தன்கூட்டிலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்து பறந்து வந்து ஒரு சிறிய ஆட்டுக்குட்டியைக் கொத்திச் சென்றது. மேலே மறுபடியும் பறந்து தன்கூட்டுக்குத் திரும்பியது.

கழுகு ஒரே பாய்ச்சலில் பறந்து செய்த இந்த அதிசயச் செயலைக் காகம் பார்த்தது.

கழுகால் இச்செயலைச் செய்ய முடியும் என்றால் என்னால் ஏன் முடியாது என்று காகம் யோசித்தது.


ஒரு நாள் காகம் தன்னால் முடிந்த அளவிற்கு மேலே உயர உயரப் பறந்து பிறகு அதிவேகமாகப் கீழ் நோக்கிப் பாய்ந்து பறந்து வந்தது. பாவம் அதற்கு ஆட்டுக்குட்டி ஒன்றும் கிடைக்கவில்லை. தரையில் மோதிக் கீழே விழுந்தது. சொண்டும் தலையும் நொறுங்கிக் காகம் இறந்தது.



**து.விதுஷன்**
**தரம் 3**
**யா/இந்து ஆரம்பப் பாடசாலை**

## தோமஸ் அல்வா எடிசன்

தோமஸ் அல்வா எடிசன் (**Thomas Alva Edison**) (1947-1931) அமெரிக்காவின் மிகச் சிறந்த விஞ்ஞானியாவார். இவர் மிலான் என்ற ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே இவருக்கு ஆராய்ச்சிகளைச் செய்வதில் விருப்பம் இருந்தது.




எடிசன் புதுப்புதுக் கருவிகளைக் கண்டுபிடித்தார். மின்சார விளக்கு, சினிமா, தொலைபேசி, கிராமபோன் முதலியவற்றைக் கண்டுபிடித்த பெருமையும் இவரையே சாரும்.

இவ்வாறாக புதுக் கண்டுபிடிப்புக்களில் நூற்றுக்கும் மேற்பட்டவை எடிசனின் புகழைப் பறைசாற்றுகின்றன. இக்கண்டுபிடிப்புக்களினால் விஞ்ஞானம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

**செ.ரவிசாந்**
**தரம் - 9**
**யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**


## தவறை உணர்ந்த குருவி!



**சிட்டுக்குருவி அக்காவுக்கு**
**கோபம் வந்ததாம்!**
**கோபத்தோடு கூட்டை விட்டுப்**
**பறந்து சென்றதாம்!**

**காடு, மலை, ஆறு பலவும்**
**கடந்து சென்றதாம்!**
**மாலை மறைந்து இருள் நிறையும்**
**நேரம் வந்ததாம்!**

**பறந்து சென்ற அக்காவுக்குச்**
**சிறகு வலித்ததாம்!**
**படுத்து உறங்க இடத்தைத் தேடி**
**அலைந்து திரிந்ததாம்!**



**வழியறியாப் பறவையக்கா**
**கதறி அழுததாம்!**
**வருத்தத்தோடு தவறை எண்ணி**
**மனம் இடிந்ததாம்!**

**வீடு நோக்கி திரும்பிச் செல்ல**
**முடிவு செய்ததாம்!**
**வீணாய்க் கோபம் கொள்ள மாட்டேன்**
**இனிமேல் என்றதாம்!**

**- சிந்துஜா**



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*காலத்தால் அழியாதவற்றை*
*காத்து நிற்பவனே*
*செய்தியாளன்.*

- எட்மண்ட்.

# நமது நோக்கு

## அடக்கப்பட்ட மண்ணிலிருந்து ஒலித்த சுதந்திரக் குரல்!

தமிழ் இனத்திற்காக தனியாளாக நின்று, உலகின் ஊடக வலைப்பின்னல்களுக்கூடாக உரத்துக் குரல் கொடுத்த மயில்வாகனம் நிமலராஜனின் (நிமால்) நினைவு தினம் இன்றாகும்.

யாழ்ப்பாணத்தின் ஊடகவியல் வரலாற்றில் - மக்களின் தளத்தில் நின்று இயங்கி, தான் எழுப்பிய சுதந்திரக் குரலுக்காகவே தன்னுயிரையும் கொடுத்த நிமாலை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது.

யாழ்ப்பாணம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் - சிவில் நிர்வாகம் ஒன்று இல்லாத சூழலில், பத்திரிகைளே வெளிவராத இக்கட்டான நிலையில் - உலகின் கவனத்துக்கு யாழ்ப்பாணத்தைக் கொண்டு சென்றதில் நிமால் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

தான் கொண்ட கருத்திலும், பாதையிலும் நேர்மையானவராகத் திகழ்ந்த நிமால் - ஊடகவியலாளன் ஒவ்வொருவரும் கொண்டிருக்க வேண்டிய துணிச்சலும் நியாயந் தேடும் மனப்பான்மையும் உள்ளத்தில் கொண்டவராகச் செயற்பட்டு வந்தார். காலத்தின் தேவையறிந்து அவரின் சேவை அமைந்திருந்தது.

நிமாலின் பணிகள் - அவரைத் தனித்து ஒரு ஊடகவியலாளனாக மட்டும் இனங்காட்டிவிடவில்லை. அதையும் கடந்து ஒரு ஊடகச் செயற்பாட்டாளனாக (Media Activist) நிமால் ஆற்றிய பணிகளை யாழ். மண் மறந்து விடாது.

தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது, எங்கும் மழையெனப் பொழிந்த குண்டு மழைகளுக்குள் - கைதடியில் கவனிப்பாரற்று விடப்பட்ட ஆதரவற்ற வயோதிபர்களைப் பாதுகாத்து அழைத்துவருவதில் நிமால் காட்டிய புத்தி சாதுரியமும் மனிதாபிமானமும் என்றும் நினைவில் நிற்பவை.

ஊடகவியலாளன் என்றால் செய்திகளைத் திரட்டித் தகவல்களை மக்களுக்குக் கொடுப்பவன் என்ற வரையறைகளுக்குள் நின்றுவிடாது, மக்களை நேசிப்பவனாக, மனிதநேயம் மிக்கவனாக இருக்க வேண்டும் என்பதற்கு - தமிழ் ஊடகவியலாளர்களிடையே தகுந்த உதாரணமாகக் காட்டக் கூடிய தகுதியை நிமால் கொண்டிருந்தார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் நெருங்கி வருவது தெரிந்தும் - நியாயத்தின் பக்கம் நின்று வாதிட்ட நிமாலின் சேவையின்றிய, அன்றைய யாழ்ப்பாணத்தை எவராலும் நினைத்துப் பார்க்க முடியாது.

ஊரெல்லாம் அடங்கிப் போக ஒரு தனியாளாக நின்று (One Man Role) நிமால் - செய்த பணிகள் அந்தக் கொடுமையான இரவின் துப்பாக்கிச் சன்னங்களின் ஒலிகளூடே கரைந்து போனாலும் - ஒரு சுதந்திர ஊடகவியலாளனுக்குரிய பாதுகாப்பையும் இருப்பையும் கேள்விக்குறியாக்கிய அந்தச் சம்பவம் மக்களின் மனங்களை விட்டு இன்னும் அகலவில்லை.

மக்களுக்காக, மக்களின் துயர்களைக் களைவதற்காக - தன்னை அர்ப்பணித்த ஊடகவியலாளனை, நேருக்கு நேர் நின்று அவனது நியாயத்தோடு மோதத் திராணியில்லாது, அவனது நேர்மைக்கு எதிர் நிற்கப் பயந்து - வஞ்சகமாகச் சுட்டுக் கொன்ற கொடுஞ்செயலாளர்களை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

நிமாலுக்கு நிகழ்ந்த துயரம் - முழு ஊடகத் துறைக்குமே விடுக்கப்பட்ட சவால் என்பது மட்டுமல்ல, மனிதாபிமானத்திற்கு அடிக்கப்பட்ட சாவு மணி என்பதை எவரும் மறக்கவும் மாட்டார்கள்.

நிமாலின் இன்றைய நினைவு தினத்தில் - சுதந்திர ஊடகத்துக்கும், மனிதநேயமிக்க ஊடகப் பணிக்குமென ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் உறுதி கொள்வதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும்.

# கடத்தப்பட்டவர் திரும்பி வந்தார்; அக்கரைப்பற்றில் தணிந்தது பதற்றம்!

## பொறுமை காத்த மக்களுக்கு ரணில் பாராட்டு

(கொழும்பு)

அமைதிக்கு பங்கம் விளைவிக்க எடுக்கப்பட்ட முயற்சியை ஒன்றிணைந்து தோற்கடித்த அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்திருக்கிறார்.

அம்பாறையில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாக வெளிவந்த தகவலையடுத்து இரண்டு நாட்களாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பகுதிகளில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் ஊரடங்குச் சட்டமும் அமுல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்க நிலை ஏற்படுத்துவதற்கு புலிகள், பொலிசார் மற்றும் பள்ளி வாசல்களின் சம்மேளனம் ஆகிய தரப்புக்கள் - கடும் முயற்சி எடுத்திருந்தன.

இந்த நிலையில் அக்கரைப்பற்று பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல்களின்போது காணாமற்போனதாகக் கருதப்படும் இளைஞர் அவரது வீட்டில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை - கடத்தப்பட்டதாக கூறப்படும் இளைஞர் இறககாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதாகவும், இதன்பின்னர் அவர் வீடு வந்தபோது பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை - இந்தச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும்படி குற்றப்புலனாய்வுப் பொலிசாருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின்பேரில் உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்றும் இச்சம்பவம் தொடர்பான விபரங்களைத்திரட்டுவதற்காக அக்கரைப்பற்றுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பளை - முகமாலை இடையிலான ஏ-9 வீதி திருத்தப்படுகின்றது

(சாவகச்சேரி)

ஏ-9 பிரதான நெடுஞ்சாலையின் பளைக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை திறக்கப்பட்டதும், இப்பிரதான வீதியூடான போக்குவரத்து மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

இந்நிலையில் குண்டும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதியைப் 'பளை வீதி அபிவிருத்தி அதிகார சபை' புனரமைத்து வருகின்றது. இதன் மூலமாக இப்பகுதிகளில் ஏற்படும் வீதி விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியுமெனக் கூறப்படுகிறது.

# 48 பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளை திருமலை நீதிமன்று இரு வாரங்களில் தள்ளுபடி

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள மேல் நீதிமன்றத்தில் கடந்த 17 நாட்கள் இடம்பெற்ற அமர்வுகளின்போது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 48 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.

கடந்த 1ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையிலான காலப் பகுதிகளிலேயே மொத்தம் 48 பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகள் மேல் நீதிமன்ற நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

இந்த 48 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பல சந்தேகநபர்களுக்கு இதன் மூலம் விடுதலை கிடைத்திருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அநேகமான வழக்குகளை, சட்டமா அதிபர் திணைக்களம் கைவிடுவதாக முடிவெடுத்ததை அடுத்தும், சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்த பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்ற விசாரணைகளுக்குச் சமூகம் அளிக்காததை அடுத்துமே இந்த வழக்குகள் நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு நம்பிக்கையான அரசை அமைப்பதற்கான திட்டங்கள் தயார்!

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு நம்பிக்கையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான பொது இணக்கப்பாட்டுடன் கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் தேசிய நல்லிணக்க அரசு அமைப்புத் திட்டத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து செயற்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்த தினேஷ் குணவர்த்தன -

இதன் மூலம் நாட்டினதும் பொதுச் சொத்துக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் அனுமதியுடனேயே மணல் ஏற்ற வேண்டும்

## கற்கோவளத்தில் படைத்தரப்பு அறிவிப்பு

(வடமராட்சி)

கற்கோவளம் மணற் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு விடுதலைப் புலிகளிடம் அனுமதி பெறுமாறு படைத்தரப்பு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

கற்கோவளம் கரையோரப் பகுதிகளில் இருந்து - அவசரத் தேவைகளுக்காக மணல் ஏற்றுவதற்குப் படையினரிடம் அனுமதி கோரியபோது - மேற்படி பிரதேசமானது விடுதலைப் புலிகளுடையது எனவும், இங்கு மணல் ஏற்றுவதற்கு புலிகள் அனுமதித்தால் மட்டுமே தாமும் அனுமதிக்க முடியுமெனப் படையினர் பொதுமக்களிற்குத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அப்பகுதியில் மணல் அள்ளுவது நிறுத்தப்பட்டுள்ளது. (23)

## மட்டக்களப்பு நகரில்

# போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த மூன்று வீதிகளைத் திறக்க நடவடிக்கை

## மேலும் சில வீதிகளில் தடை தொடர்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபைப் பகுதியில் கடந்த பதின்மூன்று வருடங்களாக பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த மூன்று வீதிகளை திறந்து விட பொலிசார் சம்மதித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரை கல்லடிப்பிரதேசத்துடன் இணைக்கும் லேடி மனிங் ட்ரைவ் வீதியில் நேற்று முதல் போக்குவரத்துச் செய்யப் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஊறணி எல்லை வீதி, வைத்தியசாலை மூன்றாம் குறுக்கு வீதி என்பனவற்றையும் நாளை மறுநாள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அண்மையில் மட்டு. அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்திருந்த கோரிக்கையைத் தொடர்ந்தே வீதிகளைத் திறக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை - இராணுவத்தினரால் மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ள இரண்டாவது லேக் வீதி, கப்பல் வீதி, வாடி வீட்டு வீதி, பொதுநூலக வீதி என்பனவற்றைத் திறப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வில்லியம் புஷ்ஷின் பொருளாதார மிரட்டலுக்கு விளாடிமிர் புட்டின் அடிபணிந்து விடுவாரா?

அமெரிக்க அதிபர் வில்லியம் புஷ் ஈராக்மீது போர் தொடுப்ப தென்ற பிடிவாதத்துடன் ஆயத்தங் களைச் செய்து வருகின்றார். மேற் காசியா முழுவதும் உள்ள தனது


புஷ்

தளங்களில் தரைப்படையையும், அராபியக்கடல், பாரசீக வளைகுடா, மத்திய தரைக்கடல் அடங்கிய இந்து சமுத்திரப் பிராந்தியம் முழுவதுமே தனது கடற்படைக் கப்பல்களையும், படைகளையும் விதைத்தது மட்டு மன்றி ஏவுகணைத் தளங்களையும் புஷ் வெற்றிகரமாக நிறுவிவருகின் றார். போருக்கான பயிற்சிகளும், ஒத்திகைகளும் திட்டமிட்ட தாக்கு தல் முறைகளையும் அமெரிக்கப் படைகள் செய்து வருகின்றன. படை களை உற்சாகப்படுத்துவதும், ஊக் குவிப்பதுமான உரைகளையும் ஆட் சியாளர்கள் மேற்கொண்டு வருகின் றனர். ஆனால் எவ்வாறான தயார் படுத்தலை ஏற்படுத்திய போதும் போரை வில்லியம் புஷ் நினைப்பது போன்று நிகழ்த்தமுடியாத நெருக் கடிகள் காணப்படுகின்றன. ரஷ்சிய அதிபர் விளாடிமிர் புட்டினின் எதிர்ப்பே வில்லியம் புஷ்சையும், அமெரிக்க நிர்வாகத்தையும் அதிர்ச்சிக்குள் ளாக்கியுள்ளது. இதில் எதிர்ப்பின் நீடிப்பையும் அதனால் ஏற்படவுள்ள விளைவுகளையும் விரிவாக நோக்கு வோம்.

விளாடிமீர் புட்டின், வில்லியம் புஷ் இரண்டு பெயர்களுமே ஒத்தி சைவான வரி வடிவத்தைக் கொண் டவை. ஆனால் உலக விவகாரங் களில் மட்டுமே ஒருங்கிசைவை எட்ட முடியாதவர்களாக உள்ளனர். அதுவும் இதுவரை காலமும் விளாடி மிர் புட்டின் அகமுரண்பாடுகளுக் குள் ஓர் ஒத்திசைவை ஏற்படுத்த முயன்றார். பல சந்தர்ப்பங்களில் வில்லியம் புஷ்ஷுக்காக தனது நலன்களையும், நன்மைகளையும் இழந்தார். தற்போது எழுந்துள்ள ஈராக் விவகாரம் அவரது பிடியைத் தளர்த்தமுடியாத, விட்டுக்கொடுப் புக்குப் போகாத சூழலை உரு வாக்கிவிட்டது போல் தென்படுகி றது. இப்பத்தி எழுதும்வரை விளாடி மிர் புட்டின் ஈராக் மீதான போருக்கு உடன்பட்டதாகத் தகவல் இல்லை.

புட்டின் தனது வெட்டு வாக்கை ஐக்கிய நாடுகள் சபையில் பயன் படுத்தப் போவதாக அறிவித்த பின் னர் மேற்கு பல முயற்சிகளை பல வழிகளூடாக எடுத்தது. முதலில் தொலைபேசி ராஜதந்திரத்தைப் பிரயோகித்தது.

இங்கு மேற்கு என்பது அமெரிக் காவும், பிரித்தானியாவுமே. ஆரம் பத்தில் பிரான்ஸ், சீனா, என்பன அதே இயல்பைக் கொண்டிருந்தன. இதில் பிரான்ஸ் நேரடியாக எதிர்த் தது. சீனா நடுநிலைமை எனக் கூறிக்கொண்டது. ஆனால் தற் போது பிரான்ஸ் மௌனமாகி விட் டது. ரஷ்யா மட்டுமே தற்போது வரை மாறாத நிரந்தரமான கொள் கையுடன் செயற்பட்டு வருகிறது.

தொலைபேசி ராஜதந்திரம் எடு படாதபோது மனித உரிமை, பொரு ளாதாரம் போன்ற காரணிகளை முதன்மைப்படுத்திச் செய்திகளை யும், உரையாடல்களையும் தந்திர மாக ரஷ்சியா பக்கம் திருப்பினார் கள். அதேவேளை உலக நாடுகள் மத்தியில் சதாம் ஹுசைன் மிகக் கொடிய போர் வெறியன், கொடுமைக் காரன், ஆபத்து மிக்கவன் என்ற பிரச்சாரத்தை மேற்கு செய்யத் தொடங்கியது. இது புட்டினின் உணர்வை மாற்றுவதற்கான இரண் டாவது முயற்சியாகக் கூட நோக்க முடியும்.

மூன்றாவது நிலையில் செச்சி னியப் போராளிகளைத் தூண்டி விட்டு ரஷ்சியப்படைகள் மீது தாக் குதலை நடாத்தும் சூழலை ஏற்ப டுத்தியது. அது மேற்கின் பார்வை யில பயங்கரவாதமும் இல்லை, உலக அமைதிக்கும், சமாதானத் திற்கும் ஆபத்தானதுமில்லை. செச் சினியப் போராட்டத்தை வில்லியம் புஷ் சிலவேளைகளில் விடுதலைப் போராட்டமென அறிவித்தால் உல கத்தின் ஊடகங்கள் முழுவதும் அதனை விடுதலைப் போராட்டமாகச் சொல்லிக் கொள்ளும் கேவலம் எம்மத்தியிலும் இல்லாமலில்லை. அவ்வாறான மிரட்டலை புஷ் செய்த போதும் புட்டின் மசியவில்லை.

நான்காவது நிலையில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளயர் அமெரிக்கா வின் தூதுவராக அனுப்பப்பட்டார். பிளயர் அமெரிக்காவின் நலன் விரும்பி என்பதை விட புஷ்ஷின் அடி வருடி என்றே கூறலாம். முன் னொருகாலத்திலேனும் சாம்ராச் சியமாகத் திகழ்ந்த பிரித்தானியா வின் பிரதமர் வெறும் போர் நடாத் தும் ஒப்புதலுக்காக தூதுவராக சென்ற கேவலம் வேறு எந்த உலகத் தலைவருக்கும் கிடைக்காத பட்டம் என்பதே இரசிக்கக்கூடிய அம்சம். ஹிட்லர், முசோலினி, இடி அமீன் எல் லாம் கொலைகாரர், போர் வெறியர், கொடுமைக்காரர் எனப் போதித்த மேற்குலகத்தின் வாரிசுத் தலை மைகள் போர் புரிவதற்கு ஒப்புத லுக்காக தூது செல்கின்றார்கள்.

நான்காவது கட்டத்தில் - இரண்டு படிநிலைக் கலந்துரையாடல் நடை பெற்றது. ஒன்று பொருளாதார உத விகள் பற்றியதாக அமைந்திருந் தது. உலகவங்கி, மற்றும் நிதி நிறு வனங்களின் உதவிகள் ஒத்துழைப் புக்கள் ரஷ்சியாவுக்கு வழங்குவது பற்றியும், வெட்டு வாக்கைப் பயன் படுத்தினால் உதவிகள் ரத்தாகலாம் என்ற தொனியிலும் ரொனி பிளயரது கலந்துரையாடல் அமைந்தது. இரண்டாவது நிலையில் வர்த்தகம், சந்தை வாய்ப்புக்கள், மற்றும் தாராள மயமாக்கல் தொடர்பான அமுல்படுத் தல் என்பன வழங்கமுடியாத நிலை மைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு என வும் கூறப்பட்டது. இந்த முயற்சிகளின் போதும் விளாடிமிர் புட்டின் நெகிழ்ந்து கொடுப்பதாக இல்லை.

ஐந்தாவது கட்டம் - அமெரிக்க அதிபதி மீண்டும் நீண்டதூர ஏவுக ணைப் பரிசோதனையை பரிசோதித் துக் காட்டியுள்ளதுடன் 1972 ஆம் ஆண்டு அமெரிக்கா - ரஷ்சியா இரண்டு நாடுகளுமே செய்துகொண்ட **Anti Ballistic Missile (ABM)** உடன் பாட்டை மீறுகின்ற நடவடிக்கை யில் இறங்கியுள்ளார். 4800 மைல் தூரத்தினைத் தாக்கும் திறன் கொண்ட இரு ஏவுகணைகளைப் பரிசோதித்துள்ளதாக பென்ரகன் அறிவித்துள்ளது. அதேபோன்று பசுபிக் கடல் பிரதேசத்தில் **NMD** எனச் சுருக்கமாக அழைக்கப்படும்- தேசிய பாதுகாப்பு ஏவுகணைப் பரி சோதனைத்திட்டம் இவ்வாரத்தின் ஆரம்ப நாட்களில் பரிசோதிக்கப் பட்டதாகவும் பென்ரகன் அறிவித் துள்ளது. இந்த மிரட்டலுக்கும் புட்டின் இதுவரை வளைந்து கொடுக்க வில்லை.

அப்படியாயின் புட்டின் எதற்கு வளைந்து கொடுப்பார்? நிச்சயமாக ரஷ்சியாவுக்கும், ரஷ்சியர்களுக்கா கவும் விட்டுக்கொடுக்கும் தேசிய தனித்துவம்மிக்க தலைவர் புட்டின். புட்டின் ஆளும் ரஷ்சியாவின் வர்க் கத்தின் வழிவந்த தேசியவாதி. அசைக்க முடியாத சுதேச உணர் வும் ஆளுமைப்பலமும் கொண்ட தலைவர். விளாடிமிர் லெனின், பிரஷ்னேவ் போன்ற தலைவர் களுக்குப் பின் ரஷ்சிய மக்கள் நேசிக்கும் ஆட்சியாளன் புட்டின் என்பது கவனிக்கத்தக்கது. புட்டின் மேற்கின் ஏமாற்றுத்தனத்தை நன்கு புரிந்து கொண்டவர். கடந்த காலத் தில் கொர்பச்சேவ்வுக்கும் சரி, யெல் சினுக்கும் சரி இதே அணுகுமுறை யையே மேற்கு கையாண்டது. பொரு ளாதார உதவிகளையும், ஒத்துழைப் புக்களையும் வழங்குவதாக உத்தர வாதம் வழங்கிவிட்டு, பின் வாங்கு வதும், ஏமாற்றுவதும் இயல்பாகி விட்டது. அதனால் ரஷ்சியா சாதித் தது எதுவுமில்லை என்பதை உணர்ந்து கொண்ட புட்டின் - அரசி யல் மாற்றத்தையேனும் உலகத் திற்கு உணர்த்தும் பலத்தை ரஷ் சியா கொண்டிருக்கட்டும் எனக் கருதுகின்றார்.

ரஷ்சியா தனது பொருளாதாரத் தை உலகவங்கியும், மற்றும் நிதி நிறுவனங்கள் கூறுவது போன்று மாற்ற முயன்று, இறுதியில் மூன்றாம் உலகத்திலுள்ள வறிய நாட்டுக்கு ஒப்பான நிலையையே அடைந் துள்ளது. தற்போதைய பொருளா தார நெருக்கடிக்கு அமெரிக்கா உட்பட மேற்குலகுதான் மிகப் பிர தான பங்காளியாகும். ரஷ்சியா உற் பத்தியால் மட்டுமல்ல - சந்தை வாய்ப்புக்களாலும், வர்த்தக வழி முறைகளாலும் மிக வறியநாட்டின் நிலைக்கு ஒப்பானதாக உள்ளது. ரஷ்சியாவின் பொருளாதார பலம் அதன் முன்னாள் சோவியத் குடிய ரசுகளிடமே அதிகம் குவிந்திருந் தது. தற்போதைய நெருக்கடியில்


புட்டின்

இருந்து மீட்சி பெறவேண்டுமாயின் சோவியத் குடியரசுகள் ஒன்றிணை தல் வேண்டும். அது மிக நீண்ட காலத்திற்கு சாத்தியப்படாத விட யம். அடுத்தது தற்போது கடைப் பிடிக்கும் பொருளாதார சீர்திருத் தத்தினை மறுசீரமைக்க வேண்டும். அதற்கான அணுகுமுறையின் கீழ் மேற்குலகத்தை ரஷ்சியா எதிர்க்க வேண்டும். அமெரிக்காவையும், பிரிட்டனையும் எதிர்த்து மேற்கு ஐரோப்பாவுடனும், ஏனைய விருத்தி யடைந்த நாடுகளுடனும் பொருளா தார வர்த்தக நெருக்கத்தை கடைப் பிடிக்க வேண்டும். மேலும் - மேற்கா சிய நாடுகளுடன் ரஷ்சியா கொண் டிருக்கும் பொருளாதார நெருக்கத் தினை தொடர்ந்து பேணுவதுடன், முழு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் ரஷ்சியா அரசியல் ரீதியாக பாதுகாப்பளிப்பதனூடாக பொருளாதார விருத்தியை ஏற்படுத்த முனைகிறது என்பதையே புட்டின் நடவடிக்கை வெளிக்காட்டுகிறது.

புட்டினை உலகின் எந்த அரசியல் தலைமையும் இராணுவரீதியில் மிரட்ட முடியாது. புட்டின் இராணு வத்தில் பல பதவிகளை வகுத்தவர் மட்டுமன்றி கே.ஜி.பி. என அழைக் கப்படும் சோவியத்யூனியனின் உள வுப்பிரிவின் தலைமைப் பதவியை குறிப்பிட்டகாலம் வகித்தவர். அணு வாயுதம், மற்றும் தொழில்நுட்ப ஆயு தங்களை உற்பத்தி செய்வதும், அதனை வர்த்தகமாக்கியதனூடாக வருமானத்தைப் பெற்ற நாட்டின் தலைவன் என்பதனாலும், இராணு வத்திற்கும் அதன் படைப் பிரிவு களுக்குள்ளும் செல்வாக்கு மிக்க நபர் என்பதனாலும் புட்டினை இரா ணுவ மிரட்டலால் கட்டுப்படுத்த முடி யாது. இதுவரை பொருளாதாரத் தினைக் காட்டியே - சீனாவையும் ரஷ்சியாவையும் மேற்கு மிரட்டி வந்தபோதும், தற்போது எழுந்துள்ள நிலை புட்டினுக்கும் ரஷ்சியாவுக்கும் தனித்துவமானது. ஆனால் வறுமை ரஷ்யர்களிடம் மேலதிகமாக உள்ள அம்சமாகவே உள்ளது. மோசடி, திருட்டு, கொலை, ஆட்கடத்தல், மிரட்டல் என வன்முறைகள் வறு மையால் சூழ்ந்துள்ளன. ஆசிய நாட்டவர் மீதான மிரட்டல்கள், வர்க்க அடிப்படையிலான மோதல் கள் ரஷ்யாவில் அதிகமாக காணப் படும் அம்சமாக உள்ளன. கடந்த காலங்களில் இவ்வம்சங்களில் அதிக மாற்றங்கள் நிகழ்ந்துள்ள தாகத் தெரியவருகிறது. அதாவது 1999களில் 52% காணப்பட்ட குற் றச்செயல்கள் 2001 இல் 28%மாக குறைந்துள்ளன. அவ்வாறே பொரு ளாதாரத்திலும் விருத்தியை ரஷ்சி யர்கள் அடைந்து வருகின்றனர். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு (மிக மெதுவாக நிகழ்கிறது) போசாக்கு என்பன படிப்படியாக மீட்சி பெறுகின்றன.

**கே.ரி.கணேசலிங்கம்**

ஐ.நா. சபைக்கூடாக போரை நிகழ்த்தாது, ரஷ்சியா தடுப்பதன் மூலம் பல மாற்றங்களை உலகத் தில் ஏற்படுத்த உள்ளது. அதே போன்று அமெரிக்கர்கள் ஐ.நா. சபைக்கூடாக போரைக் கைவிட்டா லும் - தனித்து பிரிட்டனுடன் கூட் டாக ஈராக் மீது போர் தொடுக்கும் வாய்ப்பு அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அவ்வாறான நிலை சாத்தியப்படுமாயின் ரஷ்யா அத னால் அதிக இலாபத்தை அடையும். ஆயுத தளபாட உதவிகளை ஈராக் குக்கு வழங்க முடியாது விட்டாலும் ஈராக்கின் படைகளுக்கும், மக் களுக்கும் உணர்வுரீதியான பலத்தை ரஷ்சியா அளிக்கும். இஸ்லாமிய


பிளயர்

உலகத்தின் மீதான பழிசுமத்தலுக் கும், அடக்குமுறைக்கும் எல்லை போடப்படும். மாறாக அமெரிக்கர் களுக்கு இரண்டாவது போர்க்கள மாக ஈராக் அமையும். பயங்கர வாதம் முதலாவது களமாயின் ஈராக் இரண்டாவது போர்க்களமா கும்.

அமெரிக்கர்களின் பொருளாதா ரமும் நினைக்குமளவுக்கு கொடி கட்டிப் பறக்கவில்லை. அமெரிக்கா வின் பொருளாதார நெருக்கடியால் 46% மான புதிய நியமனங்களை அரசும் தனியாரும் வழங்காது நிறுத் தியுள்ளன. 52%மான தனியார் கம் பனிகள் ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகளையும், உதவி களையும் ரத்துச் செய்துள்ளன. இன்னோர் 46% மான கம்பனிகள் ஊழியர்க ளுக்கான மேலதிக வேலை நேரத் தினை குறைத்துள்ளதுடன் சம்ப ளத்தினையும் அந்தளவு சதவீதத் தினால் குறைத்துள்ளன. கடந்த ஏப்ரலில் 0.5 சதவீதமாக இருந்த அமெரிக்கப் பொருளாதாரம் - யூலைககு பின்பு 1.4 சதவீதமாகவும் செப்ரெம்பர் இறுதியில் 1.2 சதவீத மாகவும் குறையத் தொடங்கியுள்ளது.

எனவே - புட்டின் ரஷ்யாவின் பலவீனத்தின் முன்பும் அரசியல் அதிகாரத்தை பேண முயற்சித் துள்ளமை குறிப்பிடக்கூடிய அம்ச மாகும். இருந்தபோதும் புட்டின், முன்னுள்ள நெருக்கடிகள் எல்லா வற்றையும் எதிர்கொண்டு முன்னேற பொருளாதாரம் இடமளிக்குமா என் பது சந்தேகத்திற்குரியதே.

---

# நிமால்!

நிமால்! நீங்கள் பத்துடன் பதி னொன்றாக வாழ்ந்து சென்றவர் அல்ல. உங்களின் வாழ்வு புனிதமானது. குடா நாட்டில் வெடிகுண்டுகள் மழையாக பொழிந்தபோது உங்களின் சேவை இங்கு தேவைப்பட்டது. கருத்தியல் உலகம் இருள்மண்டிக்கிடந்த சமயம் உங்களின் பேனாவிலிருந்துதான் ஒளிக் கீற்றுத் தெரிந்தது. கடந்து சென்ற யுத்த காலம் மிகவும் கொடுமையானது. அது உங்களின் உயிரையும் இரை யாக்கி எங்களின் இதயங்களில் சுமை யேற்றிவிட்டுச் சென்றுள்ளது.



பழமைக்குள் புதைந்து கிடந்த யாழ். குடாநாட்டின் ஊடகத்துறை பாரம் பரியம் உங்களின் வரவுக்குப் பின்னர் தான் வீறுகொண்டது. ஆக்கிரமிப்பும், அநியாயங்களும் எமது மண்ணில் அரங்கேறிய காலத் தில்தான் உங்களின் பத்திரிகையுலகப் பிரவேசம் நிகழ்ந் தது.

பாமரரின் இடத்துக்கு இறங்கிச் செல்லவும், அறிவு ஜீவிகளுடன் சிகரத்துக்கு ஏறிக்கொள்ளவும் உங்க ளால் எப்படித்தான் முடிந்தது! இது உங்களின் சேவை யில் நாம் கண்ட ஆச்சரியம். நீங்கள் பத்திரிகையாளர் மட்டுமன்றி மானிட நேயம் மிக்க மனிதாபிமானியாகவும் வாழ்ந்து சென்றுள்ளீர்கள். உங்களுடன் இணைநது பணியாற்றிய காலத்தை நினைத்துப் பார்க் கின்றோம். விமானங்கள் குண்டுகள் வீசும், இடிந்து சரியும்

**இன்று பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதன் இரண்டாவது நினைவுநாளாகும்.**

கட்டிடங்களின் கற்குவியலுக்குள் மனிதச் சடலங்களும், தசைத்துண்டங்களும் புதைந்து கொள்ளும். காய மடைந்தவர்கள் போக மரணித்தவர்களைக் கணக் கெடுப்பதற்கு கற்குவியலைக் கிளறிப் பார்க்க வேண்டி யிருக்கும். அங்கேயும் உங்களின் பிரசன்னம் தப்பாமல் இருக்கும். உங்களின் வைராக்கியம் அப்போது புரியும்.

நவாலியில் நரபலி நடந்தபோதும் சரி, நாகர் கோயி லில் பள்ளிச்சிறார்கள் கருகி மாண்டபோதும் சரி, தென்ம ராட்சியில் பல்குழல்கள் முழங்கியபோதும் சரி, கந்தகப் புகை கலையமுன் உங்களின் பிரசன்னம் அங்கேயும் இருக்கும். தேர்தல் திருவிழாவால் யாழ்.குடாநாடுகளை கட்டும். ஊரடங்கு உத்தரவால் வீதிகள் வெறிச்சோடும். இருந்தும் கச்சேரி வாசலில் உங்க ளைத் தரிசிக்கலாம். தேர்தல் முடிவை உலகம் அறிய முன்னர் உங்களால் புரிந்துகொள்ளவும் முடியும்.

இந்த உலகில் ஜனனம் செய்த பாரதிக்கு என்ன நடந்தது? பட்டுக் கோட்டையானுக்கு என்ன நிகழ்ந்தது? அதுவே உங்களுக்கும் நிகழ்ந்து விட் டது. உங்களின் பயணத்தின் பாதிவழி யில் உயிர் பறிக்கப்பட்டுவிட்டது.

உங்களின் நினைவுகள் எங்களின் மனங்களில் என்றும் ஒரு புல்லாங்குழ லின் இனிய கீதமாக, புதிய பூக்களின் வாசனையாக, மேனி உரசிச்செல்லும் இளம் தென்றலாக நிலைத்து நிற்கப்போகின்றது.

*உன் மரணம்*
*உலகில் நரம்புகளை அதிர வைத்தது*
*வானலைகள் சோகம் இசைத்தன*
*உன் குருதி உறைந்த*

## உங்களின் நினைவுகளுடன்...

*இம்மண்ணில் இருந்து*
*நாளை நீ உயிர்ப்பாய்*
*அன்று*
*தாழ்ந்த புருவங்கள் நிமிரும்*
*கவிழ்ந்த இமைகள் உயரும்*
*இறுகிய உதடுகள் பேசும்*
*தெய்வம் சாட்சி சொல்லும்*

இந்த நினைவுகளுடன் எங்களின் பயணம் தொடரும்.

- கணேஷ்

# விவசாய பீட மாணவர் ஒன்றிய பரிசளிப்பு வைபவம் திங்களன்று

விவசாயபீட மாணவர் ஒன்றிய பழைய மாணவர்களாகிய அமரர்கள் ஜி.கிருபாகரன், ரி.ஜெயக்குமார் நினைவாக கடந்த மாதம் நடாத்தப்பட்ட யாழ்.மாவட்டப் பாடசா லைகளுக்கிடையிலான விஞ்ஞான பொது அறிவுப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர் வரும் திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் விரிவுரை மண்டபத்தில நடைபெறும்.

இறுதிச்சுற்று வாய்மொழிப் பரீட்சையில் வெற்றியீட்டிய பாடசாலைகள்-

1ம் இடம்-ஹாட்லிக்கல்லூரி, 2ம் இடம்-புனித பரியோவான் கல்லூரி

எழுத்துப்பரீட்சையில் வெற்றியீட்டியவர்கள்-

1ம்இடம்- சிறிசோதிநாதன் பகீரதன், சிவராஜா காண்டீபன் (ஹாட்லிக் கல்லூரி)

3ம்இடம்- கீர்த்தனா இராஜேந்திரன் (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நாகமுத்து சிவகரன் (புனித பரியோவான் கல்லூரி)

5ம்இடம் - சிவராஜா கஜேந்திரன் (ஹாட்லிக்கல்லூரி), சண்முக சுந்தரம் கர்ணன்,விமலநாதன் தனுசன் (புனித பரியோவான் கல்லூரி)

8ம்இடம்- லக்ஷ்மணன்ஐயர் கேதாரசர்மா (யாழ்.இந்துக்கல்லூரி)

9ம்இடம்- சிவராமலிங்கம் குமரேசன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

10ம்இடம்-அன்ரன் அன்ட்ரு நிஷாந்தன் (யாழ்.இந்துக்கல்லூரி)

# உடுவில் சந்தை மண் அணை மக்கள் போக்குவரத்து சிரமம்

(மானிப்பாய்)

உடுவில் மகளிர்கல்லூரிக்கு முன்பாக உள்ள சந்தியில் இருந்து உடுவில் டச்சுவீதிக்கு செல்லும் வீதியில் உள்ள மண் அணையினால் காலை நேரங்களில் பாடசாலை மாணவர்கள்,சந்தைக்கு செல்லும் விவசாயிகள், உத்தியோ கத்தர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

சிலவேளைகளில் வாகனங்கள் சடுதியாக வரும்போது விபத்துக்களும் ஏற்படும் சூழ்நிலையும் உருவாகின்றது. சமாதான சூழ்நிலையின் பின் இராணுவமுகாமின் முன் இருந்த காவலரண்கள் அகற்றப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### பனை தறிக்கத் தடை

பருத்தித்துறை பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் பனை மரம் தறித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட, இந்த தடையை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (15)

# மாற்று அரசு அமைந்தாலும் மூன்று மாதங்களே நீடிக்கும்

(கொழும்பு)

எதிரணியினரின்மாற்று அரசு அமைக்கும் திட்டம் வெற்றியளித்தாலும் கூட மாற்று அரசு மூன்று மாதங்களில் கலைந்துவிடும் அபாயம் இருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மாற்று அரசு அமைப்பதற்கு ஆதரவாக ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் ஒத்துழைத்தாலும் இவர்கள் மீது மூன்று மாதங்களுக்குள் ஆளும கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும், கட்சித்தாவல் தடைச் சட்டத்தை இவர்களுக்கு எதிராகப் பிரயோகித்தால் இவர்கள் தமது எம்.பி. பதவியை துறக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் மாற்று அரசு அமைக்கும் முயற்சி பலனளிக்கப்போவதில்லை என இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# ஜனாதிபதி பதவிக்குப் பதில் நிறைவேற்று அதிகார பிரதமர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை நீக்கப்படுமிடத்து நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையை அரசியலமைப்பு திருத்தம் ஊடாக அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்தும் அரசாங்க நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்கும் பட்சத்தில் வேறுவழிகள் மூலம் அவற்றை நிவர்த்திக்க ஆலோசிக்கப்படுமெனவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

# குறைதீர் மன்றம்

1996இல் எனது தந்தையார் அப்போது நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக காணாமல் போய்விட்டார். பின்னர் ஒரு மலசல்கூடக் குழிக்குள் அவரது சடலம் காணப்பட்டது. இதனை எமது பகுதி கிராமசேவையாளர், மற்றும் மரண விசாரணை அதிகாரி தர்மேந்திரா ஆகியோர் சடலத்தைப் பார்வையிட்ட பின் அதனை மீட்டெடுக்க முடியாத நிலையில் - மலகூடக் குழிக்குள்ளேயே தகனம் செய்யப்பட்டது. இது தொடர்பான மரண அத்தாட்சிப்பத்திரத்தில் மரண விசாரணைஅதிகாரி "பகிரங்கத்தீர்ப்பு" என எழுதியமையால் வன்செயல் காரணமாக நஷ்டஈடு எதனையும் பெறமுடியவில்லை. நஷ்டஈடு பெறுவகற்காக 'பகிரங்கத் தீர்ப்பு' எனக் குறிப்பிடப்பட்டமையை மாற்றமுடியுமா?

**மு.சிறிதேவி,**
**மந்துவில் கிழக்கு,**
**கொடிகாமம்.**

நமது ஈழநாடு:- தங்களது விடயம் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இறந்தவரின் பத்திரத்துடன் உடனடியாகத் தம்மை வந்து சந்திக்குமாறு அவர் கேட்டுள்ளார். அத்துடன் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாக இருக்கும் பட்சத்தில் இக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை தம்மால் மேற்கொள்ள முடியுமென அவர் உறுதியளித்துள்ளார்.

# இன்றைய நாள் இனிய நாள்

**19.10.2002 - சனிக்கிழமை**

**மேடம்** :- தேகசுகக்குறைவு, பணவரவுக்குறைவு, வீண்செலவு, மனஸ்தாபம், கல்வியில் ஊக்கம்வேண்டும், வியாபாரமுன்னேற்றம் குறைவு.

**இடபம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, பெண்களால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழில் சிறப்பு, வெளியூர் பயணம், சுபகாரியங்களில் பங்கு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, மகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரமுன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, பணவரவுக்குறைவு, புதிய வேலைகள ஆரம்பிப்பது நன்றல்ல, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் மத்திமம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, சுபகாரியங்களில் பங்கு, பெண்கள் ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி சமம், வியாபாரம் சமம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, பொது வேலையில் பங்கு. புத்திரர் சுகம், கல்விமுன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**தனு** :- தேகசுகக் குறைவு, பணவரவுக்குறைவு, தாயார் சுகயீனம், பணநிலை ஏமாற்றம், வாகனச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் சமம், வரவுக்கு மிஞ்சிய செலவு, அயலவர்களிடம் மௌனம் சாதிப்பது நன்று, கல்வி நிலை சமம், வியாபாரம் மத்திமம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, விருந்தினர் கொண்டாட்டம், கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம்.

# வடக்கு ~ கிழக்கு அபிவிருத்திக்கு உலகவங்கி 43 மில். டொலர் கடன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்திற்கு 43 மில்லியன் டொலர்களைக் கடனாக வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில், உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது:-

வட்டியில்லாக் கடனாக வழங்கபபடும் இப்பணத்தை 40 வருடங்களில் மீளச் செலுத்த முடியுமென்றும் -

ஏறத்தாழ 8 லட்சம் இடம் பெயர்ந்த மக்களுக்கு சுகாதார மற்றும் குடிநீர் வசதி என்பவற்றை ஏற்படுத்திக்கொடுக்க இந்நிதி உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அனலைதீவுப் போக்குவரத்து ஸ்தம்பிதம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுக்கான போக்குவரத்தில் ஈடுபட்ட - வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் வண்டி- பழுதடைந்துள்ளமையால் - கடந்த இரண்டு நாட்களாக சேவையிலீடுபடவில்லை. இதனால் அப்பகுதிக்கான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. (51)

## வலிகாமம் வலய முதன்மை ஆசிரியர் செயலமர்வு

(புன்னாலைக்கட்டுவன்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் சமூகக்கல்வி, விஞ்ஞானம், உடற்கல்வி மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சி- ஆகிய பாடங்களின் முதன்மை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை தொடக்கம் 24ஆம் திகதி வரை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (83)

## பொதுக்கூட்டம்

(அரியாலை)

அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் 30ஆம் திகதி காலை 11 மணிக்கு சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சங்கத்திற்கான புதிய உழவு இயந்திரம், மற்றும் கடுக்காயடியில் முன்னர் தவறணை அமைந்திருந்த காணியை கொள்வனவு செய்வதற்குமான அங்கீகாரம் பெறுவது தொடர்பாக கலந்துரையாடப் பட்வுள்ளது. (55)

# வலிகாமம் மேற்கு, தென்மேற்கில் புழுதி விதைப்பு ஆரம்பம்

வலி.மேற்கு, வலி.தென்மேற்கு ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள்கால போக நெற்செய்கையில் நாற்று நடுவதற்காக நெல் நாற்று மேடைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இனிவரும் நாட்களில் மழை வெள்ளம் ஏற்பட்டாலோ அல்லது நீர் இறைத்தாவது நாற்றுக்கள் நடப்படும் என கூறும் விவசாயிகள் போக மிகுதிப் பேர் ஆறு,ஐந்தரை மாத காலத்தில் விளைச்சலைத் தரும் பாரம்பரிய நெல் இனங்களை விதைப்பதில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எதிர்பாக்கப்பட்டது போல உரிய காலத்தில் மழை பெய்ய தவறிய தையடுத்து பலர் தங்கள் கிணறுகளில் இருந்து நீர் இறைத்து உழுது பண்படுத்தி நெல்விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (100)

---

### ஆளுங்கட்சி.....

சந்திப்பிற்கு முன்பாகத் தொண்டமான் தெரிவித்தார். மேல் கொத்மலைத் திட்டம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எதிர்ப்பையும் மீறி அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றமையே ஆறுமுகம் தொண்டமான் ஆளும்கட்சி மீது விரக்தி கொள்ளக்காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேசமயம் தேர்தல் ஒன்று தற்போது அவசியம். தேர்தல் மூலமே முழுமையான மக்கள் ஆதரவைப் பெறமுடியும் என மற்றுமோர் மலையகத் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் கருத்துத் தெரிவித்துள்ளார். (01)

---

### மருதர்....

ஓவியர் ஹைதராபாத் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தவேளை தான் இது சம்பந்தமாக அவருடன் கதைத்ததாகவும் அவர் அந்த மாநாட்டில் இருந்தவாறே இவ்வாறு படத்தை வரைந்து பக்ஸ் மூலம் அனுப்பி வைத்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

### இன்றைய...

இவர்களைவிட தமிழ்நாட்டில் இருந்தும் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பல ஆக்க இலக்கிய வாதிகள் இந்த நிகழ்வில் பங்கு பற்றவுள்ளனர். மேலும் கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும்கூடப் பேராளர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

---

### நிமாலின்....

பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வித்தியாதரன், நமது ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தலைவர் தவச்செல்வம், பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன், வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விஜயசுந்தரம் யாழ்ப்பாண மாநகர சபை முதலவர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

இறுதியில் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் துணைச் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பல பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

# எமது உள்ளத்து.....

எழுத்தாளர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களின் எழுத்துக்களில் இருந்துதான், நாம் சிங்கள மக்களின் உணர்வுகளையும், அவர்கள் எமது உணர்வுகளையும் அறிந்துகொள்ள முடிகிறது எனவும், எங்களுடைய மன உணர்வுகளை அவர்களும் அவர்களுடைய மன உணர்வுகளை நாமும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும், இது தவிர எமது குரலை இத்தேசம் அறிந்து கொள்ள வேண்டும். தமிழ் நாடும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே மானுடம் தழுவிய தமிழ்க் கூடலை நாம் நடத்தத் திட்டமிட்டோம எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலைகளைக் கொண்டு இந்த விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை அவர்களுக்கு உணர்த்த வேண்டியுள்ளது. எங்களைப் பற்றி அவர்கள் கற்பனை பண்ணி வைத்திருக்கும் வடிவத்தை உடைத்து நாமும் மனித நேயம் மிக்கவர்கள் மானுட விருப்பில் நேசம் கொண்டவர்கள் என்பதனை எடுத்துக்கூற விரும்புகிறோம். அதனால்தான் மக்களின் மன உணர்வை வெளிப்படுத்தும் பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் அனைவரையும் அழைத்து உண்மை நிலைப்பாட்டை புரிய வைத்து எங்களைப் பற்றித் தவறாக எண்ணப்படும் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகிறோம். அந்த முயற்சியின் ஒரு பகுதி தான் இந்த நான்கு நாள் மாநாடு எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது - எங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் யாழ். குடா திரும்பியுள்ளது.

யாழ்ப்பாணம் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்ற அடிப்படையில் தான் பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். எமது தலைவர் உண்மையாகவே சமாதானத்தை நேசிக்கிறார். நாங்கள் போரை முன்னெடுத்தது போராட வேண்டும் என்ற ஆசையால் அல்ல. போர் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இதற்கு முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கியம் எங்களுக்கு ஏற்பட்டதால்தான் நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் புதுவை இரத்தினதுரை மற்றும் நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் மகிழன், செய்தித் தொடர்பாளர் நகுலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாகத்திற்கு முன் சர்வஜன வாக்கெடுப்புத் தேவை

## சேருவில பிரதம தேரர் கோரிக்கை

(கொழும்பு)

வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்படுவதற்கு முன சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த வேண்டுமென- சேருவில ரஜமஹா விகாரையின் பிரதம பௌத்த பிக்குவான சரணகித்தித்தி தேரர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படமுன்பு, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களிடையே சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனக்கோரியுள்ள அவரது வழக்கை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் -

நீதிமன்றில் நேரடியாக சமூகமளித்து இந்த வழக்குகள் தொ[illegible]பான வாய்மூல வாக்குமூலத்தை தருமாறு பிரதம பௌத்தபிக்குவுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

# முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே தீர்வு வேண்டும்

## பிரதி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பகட்டத்திலேயே முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் பேச்சுக்கள் அமைய வேண்டும் என

### இணைந்து செயற்பட முடிவு

பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து செயற்பட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். கல்முனையில் கூட்டம் ஒன்றில் பேசும்போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வன்னி மாவட்ட புனர்வாழ்வுத்துறை பிரதி அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள பலத்தை வைத்து இதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(01)

# அரச நியமன நிறுத்தத்தை எதிர்த்து எதிரணி போராடும்

## மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

அரச திணைக்களங்களில் இனி புதிதாக நியமனங்கள் எதுவும் மேற்கொள்ள வேண்டாம் என்ற அரசின் அண்மைய அறிவிப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அரசின் இந்த உத்தரவு மனிதாபிமானமற்ற, மக்களின் உரிமைகளை மறுக்கும் செயல் எனவும், ஊழியர் நலனில் அரசின் பாராமுகத்தையே இது காட்டுகிறது எனவும் ராஜபக்ஷ கணடித்துள்ளார். இந்த உத்தரவை எதிர்த்து அனைத்து எதிர்க்கட்சிகளும இணைந்து போராட்டம் நடத்த உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அரசின் இந்த உத்தரவு தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக அரச நியமனங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளிமிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை(ரூ.ச.) | விற்பனை விலை(ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.65 | 96.46 |
| 1 ஸ்ரேலிங்பவுண் | 148.53 | 149.84 |
| 1 யூரோ | 92.44 | 93.94 |
| 1 சுவிஸ்பிராங் | 63.26 | 64.06 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 52.60 | 53.42 |
| 1 ஜப்பானியயென் | 0.77 | 0.78 |
| 1 சவுதிறியால் | 25.68 | 25.68 |

பெண்களுக்காக சிநேகிதியே...!
தாச்சிமுதல் கிரிக்கெட் வரை
ஊரெழுமுதல் உலகு வரை
விளையாட்டு அரங்கம்
அறிவின் ஊற்றாய் மாணவர் மலர்
உலகின் எட்டுத் திக்கிலிருந்தும் அதிரடித் தகவல்கள்
சந்தை நிலைவரத்திற்கு தொழில்மலர்
கும்மாளமிடும் உங்கள் வீட்டுச் சுட்டிகளுக்கு சிறுவர் அரங்கம்
நாள்தோறும் பலன் சொல்லும் இன்றைய நாள் இனியநாள்
கடக்கட உள்நாட்டுச் செய்திகள்
குளிர்மைதரும் நிலவின் ஒளியாய் இலக்கியச்சோலை
ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு சிறப்பிதழ் இரண்டு பக்கங்கள் நிறைய
பலதையும் ஆராயும் விஜி விருந்தினர் பக்கம்
எல்லாவற்றையும் தரும் ஒரேயொரு பத்திரிகை
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு

மானுடத்தின் தமிழ்க் கூடல்
2002
THE TAMIL MEET OF HUMANITY
මානවයාගේ දෙමළ හමුව

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## முதலாம் நாள் நிகழ்வுகள் (19.10.2002)

காலை

| | |
|---|---|
| 9.00-11.00 | தேசியக்கொடியேற்றல்<br>கி.பாப்பா |
| | கொடிக்கீதம்<br>யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள். |
| | ஈகச் சுடரேற்றல்<br>அப்பாத்துரை விநாயகமூர்த்தி |
| | விழாச் சுடரேற்றல்<br>சிவமகாராஜா |
| | வரவேற்புரை<br>சி.இளம்பரிதி |
| | தலைமையுரை<br>சீ.வி.கே.சிவஞானம் |
| | தொடக்க உரை<br>பேராசிரியர் கா.சிவத்தம்பி |
| | சிறப்புரை<br>நிலாந்தன் |
| 11.00-12.30 | அமர்வு : கவிதை<br>தலைமை:சண்முகம் சிவலிங்கம் |
| | கட்டுரையாளர்கள்<br>சோ.பத்மநாதன்<br>ஈழத்துக் கவிதையில் தமிழ் இன, மொழி உணர்வுக்கான அடித்தளங்கள் -1970க்கு முந்திய காலகட்டம் குறித்த ஒரு நோக்கு |
| | சு.வில்வரத்தினம்<br>எழுபதுக்குப் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதை பண்பியல் மாற்றங்கள் தொடர்பான பார்வை |
| 12.30-1.30 | மதிய இடைவேளை |
| 1.30-3.30 | அமர்வு : சிறுகதை<br>தலைமை: செம்பியன் செல்வன் |
| | கட்டுரையாளர்கள்<br>தெளிவத்தை ஜோசப், தாமரைச்செல்வி<br>தேசிய இனப்பிரச்சினையும் ஈழத்துச் சிறுகதைகளும<br>இராஜதர்மராஜா<br>விடுதலை நோக்கிய ஈழத்துச் சிறுகதை இலக்கியம்<br>குறிப்புரைகள்<br>எஸ்.எல்.எம் ஹனீபா<br>முல்லைக் கோணேஸ் |
| 3.30-5.00 | அமர்வு : குழந்தை இலக்கியம்<br>தலைமை:-சி.சிவலிங்கராஜா<br>கட்டுரையாளர்<br>சபா.ஜெயராஜா<br>குழந்தை இலக்கியத்தின் உளவியற் தளம்<br>செ.யோகநாதன்<br>ஈழத்துக் குழந்தை இலக்கியம் - இன்றும் இனியும<br>குறிப்புரைஞர்<br>கே.குணநாதன் |
| 5.00-5.30 | சிறப்புரை<br>கவிஞர் இன்குலாப் |
| 5.30-5.45 | நிறைவுரை<br>தமிழினி |
| 6.00-8.00 | கலைநிகழ்ச்சி<br>நாடகம் "கரைதேடும் ஓடங்கள்" |
| | நெறியாள்கை<br>புதுவை அன்பன் |

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.